Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
**Case No. CC.No.26/2025, Cr.No.710/2023, Tirupathur Taluk PS**
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.4, Page.No.

| | |
|---|---|
| பெயர் | அஜய் |
| வயது | 20 |
| தந்தை/கணவர் பெயர் | ரவி |
| கிராமம் | பாரதிதாசன் நகர் |
| மாவட்டம் | திருப்பத்தூர் |
| தொழில் | வியாபாரம் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 27th day of April 2026.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u> (எதிரி ஆஜர்)**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 06.12.2023 அன்று காலை 06.00–07.00 மணியளவில் பாரதிதாசன் நகரில் இருந்து மார்கபெட்டிற்கு 4577 என்ற பதிவெண் கொண்ட Yamaha இருசக்கர வாகனத்தை நான் ஓட்ட பின்னால் திவாகர் உட்கார்ந்து கொண்டு வந்தார். பாரதிதாசன் நகருக்கு சற்று தொலைவில் இரயில்வே கேட்டை தாண்டி எங்களுக்கு எதிர் திசையில் வந்த தனியார் வேலாங்கண்ணி பேருந்தை ஓட்டி வந்த ஓட்டுனர் வளைவில் வேகமாக வந்து எங்கள் மீது மோதினார். விபத்தில் எனது இடது கால் கணுக்காலில் மற்றும் இடது பக்க மார்பிலும் காயம் ஏற்பட்டது. என்னுடன் வந்தவருக்கு தலை மீது பேருந்து சக்கரம் ஏறியதால் தலை நசுங்கி இறந்து விட்டார். ஆம்புலன்ஸ் மூலம் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு இருவரையும் அழைத்துச் சென்றனர். நான் ஒரு வாரம் சிகிச்சை பெற்ற மேல்சிகிச்சைக்காக ஒசூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு நான் ஒரு வாரம் சிகிச்சையிலிருந்தேன். விபத்தின் போது நான் மயக்கமடைந்ததால் விபத்தை ஏற்படுத்திய நபரை நான் பார்க்கவில்லை. பின்னர் விபத்தை

ஏற்படுத்தியவர் பா.உ.ச. நகரைச் சார்ந்த பாய் என்று கூறினார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

விபத்தில் இறந்த திவாகர் என்னுடைய உறவினர் என்றால் சரிதான். எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். நான் அன்றைய தினம் தான் அந்த வாகனத்தை எடுத்து வந்தேன். எங்களை எங்கள் நண்பர்கள் தான் மருத்துவமனைக்கு இருசக்கர வாகனத்தின் மூலம் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர் என்றால் சரிதான். நாங்கள் தான் சரியான வழியில் வந்த வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினோம்என்றால்சரியல்ல.

**<u>மறுவிசாரணை :– இல்லை</u>**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

JUDICIAL MAGISTRATE NO.II

KOVENDHAN S

Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR
Date: 2026.04.27 17:54:48 +0530

Judicial Magistrate No.II,
Tirupathur.